**ஹிங்குரன்கொட பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

-------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 24 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹிங்குரன்கொட பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | வருடத்தின் இறுதி 03 மாதங்களுக்காக பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் உரிய நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக பெற்றுக்கொள்ள வேண்டிய முத்திரை கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் உரிய நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட கலி வண்டி வழூருமானம் ரூபா 1,035,050 | இணக்கம் செய்யப்பட்டு திருத்துவதற்கு | ஏற்றுக்கொள்கின்றேன். கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஊழியர் கடன் தனிப்பட்ட கணக்கு அறிக்கைகளின் பிரகாரம் மீதியானது ரூபா 4,072,975 ஆக இருந்ததுடன், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த மீதியானது ரூபா 3,966,226 ஆனமையால் ரூபா 106,749 ஆன வேறுபாடொன்று நிலவியது. | இணக்கம் செய்யப்பட்டு சரியான பெறுமதியை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நிலுவை வீதவரி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 2,676,692 ஆக உள்ளதுடன், பட்டோலைகளின் பிரகாரம் பெறுமதியானது ரூபா 2,915,837 ஆனமையால் ரூபா 239,145 ஆன வேறுபாடொன்று நிலவியது. | இணக்கம் செய்யப்பட்டு சரியான பெறுமதியை கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 05 கணக்குகளுக்குரிய பி.ச 04 பெறுவனவு மதிப்பாய்வு மற்றும் வருமானக் கூற்று ஆகியவற்றுக்கிடையே ரூபா 16,966,269 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வேறுபாட்டிற்கு காரணமாக அமைந்தவை பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நாளேட்டுப் பதிவுகளின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை. | நாளேட்டுப் பதிவுகளின் மூலம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| | | | |
|---|---|---|---|
| | உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 433,434,124 கூட்டுத்தொகையான 05 கணக்கு விடயங்களை/ கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் பெறுமதிகளை உறுதிப்படுத்தி சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டியமை. | காணிகளின் உரித்தினை பிம்சவிய செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

**(ஈ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 02 முதல் 10 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்திற்குரிய ரூபா 4,019,598 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதியை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளின் சரியானதன்மை உறுதிப்படுத்தப்பட்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | நிதிக்கூற்றுக்களில் 2016 ஆம் ஆண்டு முதல் காண்பிக்கப்பட்டிருநுந்த ரூபா 6,725,164 தொகையான பெற வேண்டிய கணக்கு மீதியை அறவிடுவதற்காக போதியளவான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டு அறவிடுவதற்கு அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அறவிடுவதற்கு கவனம் செலுத்துகின்றேன். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 24 ஆம் பிரிவு | பிரதேச சபையினால் நடாத்திச் | உரிய பதிவேடு தயாரிக்கப்பட | ஏற்றுக்கொள்கின்றேன். தற்போது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்லப்படுகின்ற வீதிகளின் மற்றும் குறுக்கு வதிகளின் நிரந்தர அடையாளங்கள் மற்றும் எல்லைகளை அடையாளப்படுத்தும் திட்டத்தினை தயாரித்தல் மற்றும் அவற்றின் பெயர்ப்பட்டியலொன்றினை குறிப்பிட்டு விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | வேண்டும். | அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது என்பதை அறிவிக்கின்றேன். |
| (ii) | 126 ஆம் பிரிவு | வாகனத் தரிப்பிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிடல், வாரச்சந்தை குத்தகை மற்றும் நீர் கட்டணங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டு உரிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | உப விதிகளை விதிதது உரிய கட்டணங்களை அறவிட வேண்டும். | உப விதிகள் விதிக்கப்பட்டு உரிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | 134 ஆம் பிரிவு | வீதவரியினை அறவிடுவதற்காக காலத்திற்கு காலம் அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்கள் இனங்காணப்பட்டு வீதவரியினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்நாட்களில் மதிப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது. |
| (iv) | 135 ஆம் பிரிவு | வீதவரி விடுதலையளிக்கப்பட்ட ஆதனங்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வரி விடுதலையளிக்கப்பட்ட ஆதனங்களின் பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும். | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| **(ஆ)** | **1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி** | | | |
| (i) | விதி இலக்கம் 59-63 | ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும், அதிகாரப்பிரதேசத்தினுள் | விதியின் அறிவுறுத்தலுக்கமைய நடவடிக்கை | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு கைத்தொழில்கள் மற்றும் வணிகங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்காதது டன், வியாபார வரி செலுத்துமாறு கட்டறை அனுப்பப்பட்டிருக்கவில்லை ல. | எடுக்கப்பட வேண்டும். | |
| (ii) | விதி இலக்கம் 218 | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பரிசோதனையொன்றை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வருடாந்தம் மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | இடமாற்றம் பெற்று வருகைதந்த 11 உத்தியோகத்தரிகளன் ரூபா 804,495 தொகை மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற 10 உத்தியோகத்தர்களின் ரூபா 955,199 தொகையான கடன் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1988 ஏப்ரல் 20 ஆந் திகதிய 88/20 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வங்கி இணக்கக்கூற்றுகளில் கையிருப்பிலுள்ள காசாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 64,291 ஆன தொகை மற்றும் வைப்புச் செய்யப்பட்ட போதிலும் தீர்வையாகாத காசோலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 51,490 தொகையான பணத்தை | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.. |

அறவிடுவதற்கு
நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,981,895 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,816,876 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,894,500 | 4,798,892 | 4,327,291 | 3,202,983 | 4,582,000 | 5,519,268 | 4,696,067 | 3,101,407 |
| (ii) | வாடகை | 11,670,300 | 34,597,270 | 10,355,060 | 11,546,765 | 3,494,480 | 9,947,164 | 5,545,639 | 11,521,830 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,755,000 | 2,991,261 | 2,991,261 | - | 3,000,000 | 3,066,025 | 3,066,025 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 18,625,000 | 17,742,991 | 31,385,625 | 17,742,917 | 8,100,000 | 6,764,379 | - | 41,671,796 |
| | மொத்தம் | 37,944,800 | 60,130,414 | 49,059,237 | 32,492,665 | 19,176,480 | 25,296,836 | 13,207,731 | 56,295,033 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் ரூபா 37,944,800 வருமானமான மதிப்பிடப்பட்டிருந்தாலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 49,059,238 ஆகும். மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விஞ்சியமைக்கு | வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு மதிப்பீடு மேற்கொள்ளவும், கணக்கு வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | |
|---|---|---|
| பிரதானமாக முன்னைய ஆண்டுகளுக்குரிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 31,385,626 தொகை மீளாய்வாண்டின் போது கிடைத்தமை ஆகும். | | |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளுராட்சி ஆணையாளரின் 1988 மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 2005 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின் அடிப்படையில் வீதவரிக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருந்ததுடன், 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான சபையின் நிலுவை வீதவரி வருமானம் ரூபா 2,676,692 ஆகும். | 05 வருடங்களுக்கு ஒரு தடவை வீதவரி மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2013 ஆம் ஆண்டில் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்கமைய அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் புதிய மதிப்பீடொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 2.2.4 வாடகை

#### (அ) கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியளவில் நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 8,911,749 ஆக இருந்ததுடன், நிலுவையினை அறவிடுவதற்காக வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை அந்த நிலுவைக்கான பிரதான காரணமாக இருந்தது. | நிலுவை வருமானங்களை அறவீடு செய்ய உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். நிலுவை கடை வாடகைத் தொகையினை செலுத்தாத கடை உரிமையாளர்களுக்காக வாடகை உடன்படிக்கையின் பிரகாரம் கடைகளை மூடி முத்திரையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**2.2.5 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொடுப்பதற்காக சபைக்கு வருடமொன்றிற்கு 1-6 வரையான வீச்சில் ரூபா 9,631,459 ஆன தொகை நிலுவையாக இருந்தது. | நிலுவை வருமானங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 405,650 தொகையான பன்முகப்படுத்தப்பட்ட நிதியினூடாக அறவிடப்படவுள்ளது. எஞ்சிய பணத்திற்காக நினைவுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 27 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 10 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | உரிய உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏனைய விடயங்களுக்காக உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்**

| | | |
|---|---|---|
| மாகாண சபைகள் பண்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 04 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 493,385 தொகை 2018 திசெம்பர் 11 ஆந் திகதி வரையிலும் செலவிடப்பட்டிருக்கவில்லை. | தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 04 செயற்திட்டங்களை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சபை அறிந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களிடையே சபைக்குரிய நோக்கங்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சபையின் நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | பாதீட்டினை தயாரிக்கும் போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 சுற்றறிக்கையில் அஅறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | அறிவுரைகளுக்க மைய செயற்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | இலக்குகளை அண்மிக்கும் போது உரிய பணிகளை கண்காணிப்பதற்கான அடைவுகள் இனங்காணப்பட்டிராதமையால், குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | தரவுகளை சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iv) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்டு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டியமை. | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (v) | இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தின் பதவியணியை பயிற்றுவிக்கும் நடைமுறையொன்று காணப்படாமையால், நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 6,390,000பெறுமதியான கெப் வண்டியொன்று 2015 ஆம் ஆண்டின் போது விபத்துக்குள்ளாகியிருந்த காரணத்தால் முழுமையாக சேதமடைந்திருந்தது. அத்துடன், காப்பீட்டு நலன்களாக 2016 ஆகஸ்ட் 26 ஆந் திகதி பெறப்பட்ட ரூபா 3,390,000 ஆன தொகை நடைமுறைக் கணக்கில் தொடர்ந்தும் விளைவற்ற முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. வாகனத்திற்காக முழுமையான நட்டஈடாக பெற வேண்டிய எஞ்சிய ரூபா 3,000,000 ஆன தொகை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து 2019 ஏப்ரல் 18 ஆந் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், விபத்து தொடர்பான முழுமையான விசாரணையொன்று இது வரையிலும், மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | காப்பீட்டுத் தொகையினை பெற்றுக்கொள்ள மற்றும் விபத்து தொடர்பான முழுமையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | முழுமையான காப்பீட்டினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிடம் கோரப்பட்டிருந்தது. |
| (ஆ) | ரூபா 436,928 ஆன பெறுமதியுடைய மடி கணனியொன்று மற்றும் 326 கொடிக் கம்பங்கள் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 326 கொடிக் கம்பங்களின் பற்றாக்குறையினை எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், மடி கணனிகள் தொடர்பிலும் எதிர்வரும் காலங்களில் பொதுச் சபைக்கு முன்வைத்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் நிலையிலுள்ள 10 வெற்றிடங்கள் உள்ளடங்களாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 27 பேரின் வெற்றிடங்கள் நிலவுகின்றமை, 02 உப அலுவலகங்கள் 04 நூலகங்கள், இடுகாடொன்று மற்றும் நகர பிரதேசத்துடனான பிரதேச சபையொன்றாக ஹிங்குரன்கொட பிரதேச சபைக்கு செயலாற்றல் இலக்குகளை அடைந்துகொள்வதில் தடையாக அமைந்திருந்தது. | போதியளவான பதவியணியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஊழியர்களை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நூலக சேவைகளுக்காக காலரீதியான தேவைப்பாடுகளுக்கமைய சபைக்குரிய பதவியணி இனங்காணப்பட்டு அங்கீகரித்துக்கொள்ளப்படாமையால் வாசகர்களின் வருகையின் நிலவான முன்னேற்றமொன்று நிலவியது. | போதியளவான பதவியணியை இணைத்துக்கொண்டு சேவை பெறுநர்களுக்கு உச்ச சேவை வழங்கப்பட வேண்டும். | வெற்றிடமாகவுள்ள பதவிகளுக்கு ஊழியர்களை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கையொன்றில்லாது பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ள கட்டிடமொன்றில் வாடகைப் பணம் அறவிடப்பட்டிராததுடன், அதற்கு முன்னர் மாகாண விவசாய அலுவலகத்திற்காக வழங்கப்பட்டமையால் நிலுவையான ரூபா 128,865 தொகையான நீர் மற்றும் மின்சார பட்டியல் தொகை இதுவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை மேற்கொண்டு நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபையினால் ஹிங்குராங்கொட மாவட்ட நீதிமன்ற வளாகத்தினுள் நிர்மாணிக்கப்பட்ட சட்டத்தரணி அலுவலகத்தின் 16 அலுவலகங்களுக்காக அறவிடப்பட வேண்டியதாக இருந்த கேள்விக் கட்டணம் ரூபா 3,465,325 தொகை மற்றும் மாதாந்தம் அறவிடப்பட வேண்டிய ரூபா 624,000 ஆன தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | பிரதேச சபைக்கு சொந்தமான 05 சொத்து உருப்படிகள் 02 முதல் 05 வருடங்களுக்க மேற்பட்ட காலமாக விளைவற்று காணப்பட்டது. | பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பில் கவனம் செலுத்தி எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகம்

வட மத்திய மாகாண நிர்வாக திணைக்களத்தின் கிராமிய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 06 வீதிகளை மறுசீரமைக்கும் போது சான்றுபடுத்தப்பட்ட பட்டியல்கள் மற்றும் நிர்மாணங்கள் பௌதீக பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (i) | 06 வீதிகளுக்க அச்சுக்கற்களை பதிப்பதற்குரிய கொடுப்பனவிற்காக சான்றுபடுத்தப்பட்ட பட்டியல்களின் பிரகாரம் ரூபா 234,677 தொகை கூடுதலாக சான்றுபடுத்தப்பட்டிருந்தது. | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிடிகாசு இன்றளவில் விடுவிக்கப்பட்டிராமையால் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதன் பின்னர் பிடிகாசினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 02 வீதிகளுக்குரிய கொடுப்பனவை மேற்கொள்ளும் போது சான்றுபடுத்தப்பட்டிருந்த பட்டியல்களின உள்ளபடியான நீளத்தினை விட 15.5 மீட்டர்கள் குறைவாக நிர்மாணிக்கப்பட்டிருந்தமை | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிடிகாசு இன்றளவில் விடுவிக்கப்பட்டிராமையால் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதன் பின்னர் பிடிகாசினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | யால் கூடுதலாக செலுத்துவதற்கு சான்றுபடுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 140,724 ஆகும். | | |
| (iii) | வீதியொன்றின் பக்கச்சுவர்களை நிர்மாணிப்பதற்கான கொடுப்பனவிற்காக கூடுதலாக சான்றுபடுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 99,232 ஆகும். | திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கூடுதலாக சான்றுபடுத்தப்பட்டிருந்த ரூபா 99,232 தொகையினை கழித்து பிடிகாசினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கு பிரதேச சபையின் உள்ளக கணக்காய்வொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வொன்றினை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |